DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 574/2018
Prosecution Witness PW 16
.....

Name : திரு. சிவக்குமார் Caste :
Father's name : Calling :
Village : Religion :
Taluk : Age :

நாள் - 22.08.2023.

எதிரிஆஜர்.

முதல் விசாரணை-

நான் தற்போது நாகமலைபுதுக்கோட்டை காவல்நிலையம், மதுரை மாவட்டம், காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 01.04.2018 அன்று எழுமலை காவல் வட்ட ஆய்வாளராக பணிபுரிந்தபோது, சார்பு ஆய்வாளர் திரு. பால்சாமி அவர்கள் காலை 08.30 மணிக்கு என் பார்வைக்கு வைத்த எழுமலை காவல் நிலைய கு.எண். 92/2018 பிரிவு 302 இதச ன் படியான வழக்கு கோப்பினை பெற்று சம்பவ இடம் சென்று காலை 09.00 மணியளவில் சாட்சிகள் முத்துப்பாண்டி, மாயி ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.**20** ஆகும். பின்பு 09.45 மணிக்கு அதே சாட்சிகளுடன் சம்பவ இடத்தில் சிவப்பு கலர் பூப்போட்ட இரத்தக்கறையுடன் கூடிய நைலான் பாய் ஒன்று, இரத்தம் பட்ட மண் சிறிதளவு, இரத்தம் படாத மண் சிறிதளவு ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றினேன். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். சிவப்பு கலர்....

பூப்போட்ட இரத்தக்கறையுடன் கூடிய நைலான் பாய் சா.பொ. **8** ஆகும். கைப்பற்ற பொருட்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். படிவம் 95 அ.சா.ஆ. **21** வரிசை **( 3** எண்ணிக்கை**).** பின்னர் சாட்சிகள், முத்துப்பாண்டி, மாயி, இளையராஜா, ஜெயா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்னர், பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இறந்த நல்லம்மாள் என்பவரின் பிரேதத்தினை பார்வையிட்டு பிரேத விசாரணை முடித்து, த.கா. திரு. தங்கமாயன் என்பவரை நியமித்து பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனை அலுவல் மருத்துவருக்கு கடிதம் கொடுத்தனுப்பினேன். பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.**22** ஆகும். பின்னர், அரசு மருத்துவமனை சென்று அங்கு சாட்சிகள் மணிகண்டன், பெரியபாண்டி ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்களை பதிவு செய்தேன். அன்று மாலை 16.15 மணிக்கு கிராம நிர்வாக அலுவலர் திரு.நவநீத ராமன் அவர்களிடம் எதிரி கொடுத்த ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் தனி அறிக்கை, எதிரி சின்னபாண்டி என்பவருடன் ராஜபிரபு என்பவர்துணையுடன் நிலையத்தில் ஆஜர் படுத்தியபோது,அவற்றை பெற்று ஆய்வு செய்து எதிரியை விசாரித்து அன்று 16.30 மணிக்கு எதிரி சின்னபாண்டியை எழுமலை காவல்நிலையத்தில் வைத்து காரணம் சொல்லி கைது செய்தேன். அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல்

வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். அதில் சாட்சிகளான திரு. நவநீத ராமன்(VAO) மற்றும் ராஜபிரபு என்பவர்களிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர், எதிரி கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தின்படி அதே சாட்சிகள் மற்றும் எதிரி சின்னபாண்டியுடன் அவரது தோட்ட வீட்டிற்கு வடபுறம் உள்ள புதரில் அவர் மறைத்து வைத்திருந்த இரத்தம் படிந்த அரிவாள் ஒன்று , இரத்தக்கறை படிந்த 8 முழம் வேஷ்டி ஒன்று, இரத்தம் படிந்த வெள்ளை நிற முழுக்கை சட்டை ஆகியவற்றினை அத்தாட்சியில் கைப்பற்றி அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர், நிலையம் வந்து எதிரி மற்றும் சொத்துக்களை பாராவில் ஒப்படைத்தேன். சாட்சிகள் திரு. நவநீத ராமன்(VAO) மற்றும் ராஜபிரபு ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், பிரேத பரிசோதனைக்கு அலுவலாக சென்ற த.கா. திரு. தங்கமாயன் அவர்கள் நிலையத்தில் ஆஜராகி அவர் ஒப்படைத்த தனி அறிக்கை மற்றும் இறந்த நல்லம்மாளின் உடைமைகள் இரத்தக் கறை படிந்த கருப்பு மற்றும் மெரூன் கலரில் மாம்பிஞ்சு டிசைன் போட்ட சேலை ஒன்று மற்றும் இரத்தக்கறையுடன் கூடிய லைட் புளூ ஜாக்கெட் ஆகியவற்றை படிவம் 91 ல் கைப்பற்றினேன். பின்னர், சாட்சிகள் த.கா. தங்கமாயன், காவலர் தேவராஜ் மற்றும் சார்பு ஆய்வாளர் பாலுச்சாமி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். 02.04.2018 அன்று எதிரி சின்னப்பாண்டியை தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பிவைத்தேன். பின்னர், சாட்சிகள் லோகராணி, அறிவழகன், ...

முத்துக்காளை, குபேந்திரன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்களை பதிவுசெய்தேன். பின்னர், 10.04.2018 அன்று பெண் காவலர் செல்வி மூலம் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை நீதிமன்றம் மூலம் பி. ஆர் எண் பெறப்பட்டு வட்டாரப் பகுப்பாய்வு ஆய்வகத்திற்கு பகுப்பாய்விற்காக அனுப்பிவைத்தேன். பின்னர், 29.05.2018 அன்று உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண். 2 நீதிமன்றத்தில் சாட்சிகள் இளையராஜா மற்றும் லோகராணி ஆகியோரிடம் 164 சி ஆர் பி சி-ன் படி வாக்குமூலங்கள் பெற ஆவண செய்யப்பட்டது. பின்னர், 19.06.2018 அன்று பிரேத பரிசோதனை செய்த உசிலம்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. சந்திரன் அவர்களிடம் பிரேத பரிசோதனை சான்று பெற்று தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர், RFSL Junior scientific Officer திரு. நாகராஜ் என்பவரைவிசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண். 2 -ன் தலைமை எழுத்தர் திருமதி. ரத்தின பாண்டியம்மாள் அவர்களையும் பெண் காவலர் செல்வி அவர்களையும் விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்களை பதிவு செய்தேன். உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண். 2 நடுவர் திரு.தனசேகரன் அவர்களையும் சாட்சி பட்டியலில் சேர்த்து, விசாரணை முடித்து அன்றைய தினமே எதிரி சின்னபாண்டி மீது இ.த.ச பிரிவு 302 ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். சாட்சிகள் மணிகண்டன், பெரியபாண்டி மற்றும் முத்துப்பாண்டி ....

ஆகியோர்களை விசாரித்ததில் அவர்கள் சொன்னபடிதான் வாக்குமூலங்களை பதிவு செய்தேன்.

குறுக்குவிசாரணை-

இவ்வழக்கில் சம்பவத்தை நேரடியாக கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லை என்றால்சரிதான். புகாரானது அ.சா.1ன் அனுமானத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டதென்றால் சரிதான். இவ்வழக்கில் நேரடி சாட்சிகள் இல்லாத நிலையில், சுற்றுப்புற சாட்சிகளை விசாரித்து மேற்படி வழக்கு பதிவு செய்யப்பட்டதென்றால்சரிதான். எங்கள் துறையில் மோப்பநாய்களை நாங்கள் எதிரி யார் என்று தெரியாதநிலையில் பயன்படுத்துவோம். இவ்வழக்கில் புலன் விசாரணைக்காக மோப்ப நாய்கள் பயன்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. சந்தேகத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட புகாரினை நான் குற்றவியல் நடைமுறைச்சட்டம் 174 குவி முச -ன் கீழ் மு.த.அ பதிவு செய்யப்படவில்லை. 31.03.2018 அன்று மதியம் 12.00 மணி முதல் 01.04.2018 காலை 07.30 மணி வரை இடையேயான நேரத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகிறது என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையினை பார்வையிட்டேன். பிரேத பரிசோதனை அறிக்கையில் உடற்கூறாய்வு செய்வதற்கு முன்பு எந்த தேதியில், எந்த நேரத்தில் மரணம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நேரடியான சம்பவ சாட்சிகள் யாரும் இல்லை என்பதால், மரணம் எப்போது ஏற்பட்டதென்பதை பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடாத நிலையில், எதனடிப்படையில் சம்பவ நேரம், சம்பவ தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

புகாரின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிரியை 01.04.2018- அன்று கைது செய்து நீதிமன்றக் காவலுக்கு அனுப்பினேனா என்றால் அன்று அனுப்பவில்லை, 02.04.2018 அன்று மதியம் அனுப்பி வைத்தேன். எதிரியை கைதுசெய்து 02.04.2018 அன்று காவல்நிலையத்தில் வைத்திருந்ததை அ.சா.1 பார்வையிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் அவ்வாறு சொல்லியிருக்கலாம். எதிரி பயன்படுத்திய இரத்தக்கறை படிந்த வேஷ்டி, சட்டை சம்பவ இடத்தில் தொங்கிக் கொண்டிருந்ததாகவும் அதை கைப்பற்றியதாகவும் சாட்சிகள் சொல்லியிருந்தால் அது தவறு. சம்பவ இடத்திற்கு 01.04.2018 அன்று காலை 09.00 மணிக்கு சென்றபோது எங்களுடன் கிராமநிர்வாக அலுவலர் மற்றும் தலையாரி ஆகியோர் வந்தார்களா என்றால் இல்லை. அ.சா.1 இளையராஜா என்பவர் வழக்கில் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட அரிவாளை மோப்ப நாய்கள் உதவியுடன் மல்லிகை தோட்டத்தில் கைப்பற்றியதாக தன்னுடைய விசாரணையில் சொல்லவில்லை. அ.சா.9 விஏஓ திரு. நவநீத ராமன் என்பவர் பொறுப்பு விஏஓ என்பதற்கான ஏதேனும் ஆவணம்எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. போத்தம்பட்டி கிராமம் சம்பவ இடத்திலிருந்து சுமார் 12 கி.மீ தொலைவில் இருக்குமென்றால் இருக்கலாம். ஒவ்வொரு கிராமங்களுக்கும் தனித்தனியாக கிராம நிர்வாக அலுவலர் உள்ளனர் என்றால் தெரியவில்லை. பிரேத விசாரணைஅறிக்கையில் காலம் 9-ல் இறப்பிற்கான வெளிப்படை காரணம் என்பது நடத்தையில் சந்தேகப்பட்டு சந்தேகத்தின் அடிப்படையில் கொலை

செய்யப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதென்றால் சரிதான். அரிவாளுக்கும் பண்ணை அரிவாளுக்கும் எனக்கு வேறுபாடு தெரியும். இவ்வழக்கில் குற்றச் செயலுக்கு பயன்படுத்தப்பட்டது பண்ணை அரிவாள் என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கை 01.04.2018 அன்று எத்தனை மணிக்கு தயாரிக்கப்பட்டதென்ற நேரம் குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான். சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட அரிவாளில் இரத்தக்கறை இருந்ததென்றால் சரிதான். இத்தக்கறைபடிந்த அரிவாளில் இருந்த இரத்தக்கறையானது மனித வகை இரத்தத்தில் எந்த பிரிவை சர்ந்தது என்ற அறிய இராசயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டதென்றால் சரிதான். இவ்வழக்கில் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தினை இராசயன பரிசோதனைக்கு அனுப்பப்படவில்லையென்றால் சரியல்ல. சம்பவ நடந்த இடம் மலையடிவாரத்திற்கு கீழ் என குறிப்பிடப்பட்டுள்ளதென்றால்சரி. ஆனால் எந்த மலை அடிவாரம் என்று குறிப்பிடவில்லை என்றால்சரிதான். சம்பவ இடத்தில் இறந்தவரின் பிணம் அங்கேயிருந்த மருந்து தெளிப்பான் மீது தலை இருந்தது என்று அ.சா.1 விசாரணையில் சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. எதிரி சம்பவத்திற்கு முன்பு அவரது மனைவியை அடித்ததாக காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் உண்டா என்றால் இல்லை. இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் 2 எதிரியினுடைய சொத்தினை தங்களின் பெயரில்எழுதிக் கொடுக்கவேண்டும் என்று கேட்போது எதிரி மறுத்ததால், எதிரியை அ.சா.1 மற்றும் 2 ஆகியோர் தாக்கியதாகவும்,

அதனடிப்படையில் இதே காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்கு ஒப்புக்கொள்ளப்பட்டு அபராதத் தொகையாக ரூ.2,000/- செலுத்தி வந்த விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. இறந்துகிடந்தவரின் பிரேதத்தை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது, அதை நான் தான் ஏற்பாடு செய்தேன். தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிய வாகன ஓட்டியை இவ்வழக்கில் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. அ.சா.1, அ.சா.2 என்னுடைய விசாரணையில் இறந்துகிடந்த நல்லம்மாள் பிரேதத்தை பார்த்து சத்தம்போட்டோம் என்றும், பக்கத்தில் இருந்த மொக்கச்சாமி மகன் பெரிய பாண்டி மகன் ஓடி வந்தார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுத்தது சம்பவம் நடந்து இரண்டு மாதங்கள் கழித்து கொடுக்கப்பட்டதென்றால் சரிதான். இவ்வழக்கினுடைய புகார் அ.சா.1 வாய்மூலம் கொடுக்கப்பட்டு அது காவல் நிலையத்தில் தட்டச்சு செய்யப்பட்டு அந்த புகாரில் அ.சா.1 ன் மனைவி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல, எழுத்துமூலமாக புகார் கொடுக்கப்பட்டது. குருதியியல் அறிக்கையில் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சட்டை மற்றும் வேட்டியில் இரத்தக்கறை இருந்ததாக குறிப்பிடப்பட்டு எந்தக்குறிப்பும் இல்லை என்றால், அது மனிதவகை இரத்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எந்த இரத்தத் தொகுதி என்று குறிப்பிடவில்லை. இவ்வழக்கின் புகாரானது உண்மைக்குப்புறம்பாக சந்தேகத்தின்

அடிப்படையில் கொடுக்கப்பட்டதென்றும், எதிரியின் சொத்தை அபகரிப்பதற்காக அ.சா.1 மற்றும் 2 இறந்தவரை கொலை செய்துள்ளார்கள் என்றும், அதனை மறைத்து எதிரியின் மீது பொய்யாக ஒரு புகார் கொடுத்துள்ளார்என்றும், இவ்வழக்கினை சரியாக புலன் விசாரணை செய்யாமல், அனுமானத்தின் அடிப்படையில் அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரியை கைது செய்ததாகவும், அவரிடமிருந்து ஒப்புதல்வாக்குமூலம் பெற்றதாகவும், இரத்தக்கறை படிந்த உடுப்புகள் கைப்பற்றப்பட்டதாகவும் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றும், நான் இவ்வழக்கினை சரியாக புலன் விசாரணை செய்யாமல் இவ்வழக்கினை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லையென்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம்- சிவக்குமார்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxxx
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.